# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

**2016 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 19 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி**

*(2016.02.23 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


# றிசாத் பதியுதீன் மன்றம் (கூட்டிணைத்தல்)

(தனியார் உறுப்பினர் சட்டமூலம்)

**றிசாத் பதியுதீன் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ அப்துல்லா மஹ்ரூப் அவர்களால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

## றிசாத் பதியுதீன் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை.

“றிசாத் பதியுதீன் மன்றம்” என அழைக்கப்படுவதும், அறியப்படுவதுமான கழகமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட கழகத்தோடு தொடர்புபட்ட குறிக்கோள்களையும், கருமங்களையும் பயனுற கொண்டுநடாத்தும் நோக்கத்துடன் இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட கழகமானது எந்தப்பல்வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுவரை சொல்லப்பட்ட கழகத்தினால் வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும் அத்துடன் அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணபத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1**. இச்சட்டம், 2016 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, றிசாத் பதியுதீன் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

றிசாத் பதியுதீன் மன்றத்தைக் கூட்டிணைத்தல்.

**2**. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும், அதன் பின்னரும் தற்போது குறித்த றிசாத் பதியுதீன் மன்றம் (இதனகத்துப்பின்னர் ‘‘மன்றம்’’ எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய அவ்வெண்ணிக்கையினரான உறுப்பினர்களும், இதனகத்துப் பின்னர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும், அதன்கீழ் ஆக்கப்படக் கூடிய விதிகளுக்கும் அமைய உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படும் அத்தனை ஆட்களும் றிசாத் பதியுதீன் மன்றம்” என்னும் பெயர் மகுடத்தின் கீழ் இடையறாவழியுரிமை கொண்ட (இதனகத்துப்பின்னர் ‘‘கூட்டுத்தாபனம்’’ எனக் குறிப்பீடு

செய்யப்படும்) கூட்டிணைக்கப்பட்ட குழுவாதலும் வேண்டும். அத்துடன் அப்பெயர் கொண்டு அது எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் அதன் விருப்பப்படி அதனை மாற்றவும் முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3**. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக்குறிக் கோள்கள் பின்வருவனவாகவிருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) இலங்கை வாழ் இனங்களுக்கிடையில் சமாதானம், தூய எண்ணம், பரஸ்பர உறவு மற்றும் ஒத்தாசை போன்றவற்றை வளர்த்தல் ;

(ஆ) தேவையிலுள்ள பாடசாலையின் சிறுவர்களுக்கு தமது கல்வியைத் தொடர்வதற்கு அவர்களை இயலச் செய்வதற்கும் பரிசில், புலமைப்பரிசில் மற்றும் உதவிகள் அளித்தல், ஒழுங்காகப் பாடசாலைக்குச் சமுகமளிப்பதற்கு அவர்களை ஊக்குவித்தல், அவர்களின் கல்வி, கலாசார மற்றும் அறிவியல் செயற்பாடுகளுக்கு உதவுதலும், அத்துடன் நிரந்தர மற்றும் நடமாடும் நூல் நிலையங்களை தாபித்தலும் ;

(இ) மனித உரிமை, மனிதாபிமானம், அடிப்படைச் சுதந்திரம், சனநாயகம் போன்றவற்றை விருத்தி செய்தலும் பாதுகாத்தலும் ;

(ஈ) கிராமம் மற்றும் பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள இயற்கை வளங்களைக் கொண்டு அப்பிரதேசங்களை அபிவிருத்தி செய்தல் ;

(உ) உயரிய இலாபத்தைப் பெறும் நோக்குடன் புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி விவசாய மற்றும் மீன்பிடித்துறைகளை அபிவிருத்தி செய்தல் ;

(ஊ) விஞ்ஞானக் கல்வியை அபிவிருத்தி செய்வதற்காகவும் மற்றும் நாட்டை அபிவிருத்தி செய்வதற்காகவும் தகவல் தொழினுட்ப நிலையங்களை இலங்கை பூராவும் அமைத்தல் ;

(எ) உயர்கல்வி நிறுவனங்களை வலுப்படுத்தவும், உயர் கல்வியை மேம்பாடு செய்வதற்கும், ஆராய்ச்சிகள் மற்றும் புலமைப் பரிசில்கள் வழங்க ஏற்பாடு செய்தல் ;

(ஏ) இலங்கையில் வாழும் பல்வேறுபட்ட இனங்களுக் கிடையே இன ஒற்றுமையையும் அவர்களைப் பலப் படுத்தும் நோக்குடன் சமூக மற்றும் பண்பாட்டுச் செயற்பாடுகளை ஊக்குவித்தல் ;

(ஐ) பெண்கள், சிறுவர்கள், அங்கவீனர்கள் மற்றும் ஏழை கள் மத்தியில் சுபீட்சத்தை உருவாக்குதல் ;

(ஒ) மனிதநேயம், விளையாட்டு, வரலாற்று மற்றும் ஆன்மீக நடவடிக்கைகளை மேம்படுத்தல் ;

(ஓ) இனம், மதம் அல்லது சாதி பற்றிய ஏதேனும் குறிப்பீடு கள் இன்றிக் கல்வி, மத, கலாசார, கலைசார் மற்றும் விளையாட்டு வசதிகளின் அபிவிருத்தியில் உதவுதல் அத்துடன் பலதரப்பட்ட விழாக்கள் மற்றும் போட்டி களை நடாத்துதல் ;

(ஔ) வறிய, கைவிடப்பட்ட மற்றும் நோய்வாய்ப்பட்ட ஆட்களுக்கான மருத்துவ நிவாரணங்கள் மற்றும் உணவுகளை வழங்குதல், இடம்பெயர்ந்த ஆட்கள் மற்றும் முதியோர்களுக்கான வீடுகளைத் தாபித்தலும், பராமரித்தலும் சிறுவர் இல்லங்கள் அமைத்தலும் அத்துடன் சிறுவர்கள் மற்றும் முதியோர்களுக்கான நாள் கவனிப்பு நிலையங்களைத் தாபித்தலும், பராமரித் தலும் ;

(க) ஒத்த குறிக்கோள்களைக்கொண்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் ஒன்றிணைத்தலும், ஒத்துழைத்தலும்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**4.** (1) கூட்டுத்தாபனத்தின் முகாமையும் நிருவாகமும் தவிசாளர், செயலாளர், பொருளாளர் மற்றும் எட்டுப் பேரைக் கொண்ட கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கிணங்கத் தெரிவு செய்து நியமிக்கப்பட்ட பணிப் பாளர்கள் சபை ஒன்றின் மூலம் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கும் அமைய நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) மன்றத்தின் ஸ்தாபக உறுப்பினரான கௌரவ நிசாத் பதியுதீன் பணிப்பாளர்கள் சபையின் ஆயுட்காலத் தவிசாளராதல் வேண்டுமென்பதுடன், அதன் பின்னர் அவரின் குடும்ப உறவின ரொருவர் பணிப்பாளர்கள் சபையின் அடுத்த தவிசாளராக வருதலும் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் முதலாவது பணிப்பாளர்கள் சபை யானது இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகித்த நிருவாக சபையின் உறுப்பினர்களையும் கொண்டி ருத்தல் வேண்டும்.

(4) தவிசாளர் தவிர்ந்த பணிப்பாளர்கள் சபையின் உறுப்பின ரொருவர், இறப்பினால், பதவி விலகலால், முன்னதாகவே தமது பதவி வெற்றிடமானாலொழிய, நான்கு ஆண்டு காலப் பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும். பணிப்பாளர்கள் சபையில் இறப்பின் அல்லது பதவி விலகலின் காரணமாக வெற்றிடமொன்று ஏற்படுமிடத்து, புதிய உறுப்பினர் ஒருவர் அத்தகைய வெற்றி டத்தை நிரப்ப நியமிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய புதிய உறுப்பினர் நான்கு ஆண்டு காலப்பகுதிக்குப் பதவி வகித்தலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.*

**5.** இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின தும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனத்தின் குறிக் கோள்களை அல்லது அவற்றுள் எதனையேனும் மேம்படுத்துவதற்கு அல்லது முன்னேற்றுவதற்கு அவசியமானவையான அல்லது விரும்பத்தக்கவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும், செய்யவும், புரியவும், நிறை வேற்றவும், கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவங்களுள், கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய வங்கிக் கணக்குகளைத் தொடங்குதல், செயற்படுத்தல், முடிவுறுத்தல்

என்பவற்றுக்கும், பிணைப் பொறுப்புடனோ அல்லது பிணைப்பொறுப்பின்றியோ பணம் கடன் பெறுவதற்கும் அல்லது திரட்டுவதற்கும், மானியக்கொடைகளையும், நன்கொடைகளையும் பெறுவதற்கும் அல்லது சேகரிப்பதற்கும், இலங்கையில் அல்லது வெளிநாடுகளிலிருந்து தனிப்பட்டவர்களிடமோ அல்லது நிறுவனங்களிடமிருந்தோ நிதியுதவிகளையும் வேறு உதவிகளையும் பெற்றுக்கொள்ளவும் அதன் நிதிகளை முதலீடு செய்வதற்கும் மற்றும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும், சேவையாளர்களையும் வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்தல், வேலையிலிருந்து நீக்குதல் என்பவற்றுக்குமான தத்துவமும் அடங்கும்.

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்.*

**6**. (1) ஏதேனும் பொதுக் கூட்டத்தில், சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றிலிரண்டு பங்குக்குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மை கொண்டு, பின்வரும் கருமங்களுள் எல்லாவற்றுக்குமாக அல்லது எவற்றுக்குமாகவும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் அல்லது எழுதப்பட்ட சட்டமொன்றிற்கு ஒவ்வாதனவாகவிராக விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பாண்மையை வகைப்படுத்தலும், உறுப்பினர்களை அனுமதித்தலும், விலக்குதலும் அல்லது அவர்கள் பதவியை விட்டு விலகுதல், அங்கத்துவ சந்தாப்பணம் தீர்மானித்தல் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தினதும், பணிப்பாளர்கள் சபையினதும் கூட்டங்களைக் கூட்டுதலும், நடாத்துதலும் அவற்றில் அவதானிக்கப்படவேண்டிய நடவடிக்கைமுறைகள், அத்தகைய கூட்டங்களுக்கான கூட்ட நடப்பெண் மற்றும் அவர்களது தத்துவங்களையும், கடமைகளையும் பிரயோகித்தலும், புரிதலும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் என்போரின் நியமனங்களும், தத்துவங்களும், கடமைகளும் மற்றும் பணிகளும்;

(ஈ) பணிப்பாளர்கள் சபையினதும், கூட்டுத்தாபனத்தினதும் உறுப்பினராக வருவதற்கான தகைமைகள் ; அத்துடன்

(உ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும், முகாமை செய்தலும் ;

(2) கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்படும் விதிகள் இப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின்கீழ் விதி ஒன்று ஆக்கப்படுவதைப் போன்று அதேபோன்ற கூட்டத்திலும் அதேமுறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், ஒழிக்கப்படலாம் அல்லது அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் ஒவ்வொருவரும் கூட்டுத்தாபனத்தின் விதிமுறைகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

**மன்றத்தால் செலுத்தப்படற் பாலனவும் மன்றத்திற்குச் செலுத்தப்படற் பாலனவுமான கடன்கள்.**

**7**. இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று இருக்கின்ற மன்றத்தின் எல்லாக் கடன்களும், பொறுப்புகளும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதலும், கொடுத்துத் தீர்க்கப்படுதலும் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று மன்றத்துக்கு வருமதியான எல்லாக் கடன்களும் அல்லது இதன் பின்னர் பெறப்படவுள்ள எல்லாப் பணங்களும் பணிப்பாளர்கள் சபையினால் தீர்மானிக்கக்கூடியவாறான ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

**கூட்டுத்தாபனத்தின் நிதியம்.**

**8**. (1) கூட்டுத்தாபனம், அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். கூட்டுத்தாபனத்துக்காக அல்லது அதன் கணக்கால் கொடை, அன்பளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், உதவு தொகை, கட்டணங்கள் அல்லது மானியக்கொடைகள் என்ற வகையாக இதுகாலவரை அல்லது இதன் பின்னர் பெறப்படவுள்ள எல்லாப் பணங்களும் பணிப்பாளர்கள் சபையினால் தீர்மானிக்கக்கூடிய ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனம் இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும், பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்கான எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாமென்பது.*

**9**. கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவு, அளிப்பு, நன்கொடை, குத்தகை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு, ஏதும் உடன்படிக்கைகளின்கீழ் அல்லது வேறுவகையாகக் கூட்டுத்தாபனத்துக்கு உரித்தாக்கப்படக்கூடிய அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைப் பெறவும், வைத்திருக்கவும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இயலுமானதாதலும், ஆற்றலுடையதாதலும் வேண்டும். அத்துடன் அத்தகைய எல்லா ஆதனங்களும், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறுவகையில் கையாளவுமுள்ள முழுத்தத்துவத்தைக் கூட்டுத்தாபனம் கொண்டிருத்தலும் வேண்டும்.

*உறுப்பினர்களின் பொறுப்பை வரையறுத்தல்.*

**10**. கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரெவரும் கூட்டுத்தாபனத்தின் கடன்களையும், பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்க்கும் நோக்கத்துக்காக அவரிடமிருந்து கூட்டுத்தாபனத்துக்கு வருமதியாகவிருக்கக்கூடியவாறான அத்தகைய உறுப்பினரிடமிருந்து செலுத்தப்படவேண்டிய தொகையை விஞ்சுகின்றதான ஏதேனும் உதவு தொகையைச் செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

*கலைக்கப்பட்டதன் மீது எஞ்சியிருக்கின்ற ஆதனம்.*

**11**. கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன் மீது அதன் எல்லாக் கடன்களையும், பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்த்த பின்னர் எத்தகையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபன உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படல் ஆகாது. ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை உடையதும் அவற்றின் விதிகளின்படி அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தை பகிர்ந்தளித்தல் தடைசெய்யப்பட்டதுமான வேறு நிறுவனங்களுக்கு கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றுதல் வேண்டும். அத்தகைய நிறுவனமானது கலைக்கப்படும் பட்சத்தில் அல்லது அதற்கு முன்னர் கூட்டுத்தாபன உறுப்பினர்களால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் கணக்குகளும் கணக்காய்வும்.*

**12.** (1)பணிப்பாளர்கள் சபையானது கூட்டுத்தாபனத்தால் பெறப்பட்டுச் செலவிடப்பட்ட எல்லாப் பணங்களும் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒவ்வோராண்டும் ஒரு முறையாவது பணிப்பாளர்கள் சபையினால் நியமிக்கப்படும் கணக்காய்வாளர் ஒருவரால் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டோரால் பரிசோதனை செய்யப்பட்டு கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**13.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது தவிசாளர் அத்துடன் பணிப்பாளர்கள் சபையின் வேறு அலுவலரொருவர் முன்னிலையிலன்றி எத்தன்மைத்தான சாசனமெதிலும் பொறிக்கப்படலாகாது. அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாசனத்தில் தமது பெயர்களை எழுதி ஒப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஒப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சி ஒருவராக ஒப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

*குடியரசினதும் ஏனையோர்களினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**14.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல், கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**15.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா *1,387* : (வெளிநாடு) ரூபா *1,849* : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. *163*, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்